இந்திய உச்ச நீதிமன்றம்

2021ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 16-ஆம் நாள்

முன்னிலை

மாண்புமிகு நீதியரசர் திரு. நவீன் சின்ஹா

மற்றும்

மாண்புமிகு நீதியரசர் திரு. ஆர்.சுபாஷ் ரெட்டி

உரிமையியல் மேல்முறையீட்டு எண்.4800/2021

ஓரியன்டல் இன்சூரன்ஸ்
கம்பணி லிமிடெட் ...மேல்முறையீட்டாளர்

எதிர்

கஹ்லான் (எ) ஜாஸ்மெயில் சிங் கஹ்லான் (இறந்துவிட்டார்)
அவரது சட்டப்பிரதிநிதி நரீந்தர் கஹ்லான்
கோசகன் மற்றும் ஒருவர் ... எதிர்மேல்முறையீட்டாளர்

மோட்டார் வாகனச் சட்டம், 1988: பிரிவு 166 (அ) - இழப்பீடு - மோட்டார் விபத்தில் ஏற்பட்ட காயங்கள் - கோருரிமையாளர் மோட்டார் விபத்தில் 100 சதவீதம் உடல் ஊனத்தை அனுபவித்தார் - இழப்பீடு கோருதல் - ரூ. 1,00,000/- மதிப்புள்ள தீர்வளிப்பு தொகை - உயர் நீதிமன்றத்தில் 9% வட்டியுடன் மேல்முறையீடு - மேல்முறையீட்டின் நிலுவையில் இருக்கும் போது, கோருரிமையாளரின் மரணம், விபத்தில் பாதிக்கப்பட்ட காயங்களுக்குக் காரணமாகக் கூறப்படவில்லை - மேல்முறையீட்டில் கோருரிமையாளரின் மகளின் பெயரை மாற்ற வேண்டும் - இழப்பீட்டை ரூ.37,81,234/- ஆக உயர்த்தியது உயர் நீதிமன்றம் –

மேல்முறையீட்டில், வழங்கப்பட்ட தீர்வு: இந்த சட்டம் ஒரு நன்மை பயக்கும் மற்றும் மக்கள் நலச்சட்டம் - மரணம் ஏற்படும் தருணத்தில் சட்டப்பூர்வ வாரிசுகள் உரிமைகோரல்களைத் தொடர முடியும் என்றால், சட்டப் பிரதிநிதிகள் பிரிவு 166 இன் கூறு 1 (சி) இன் கீழ் விபத்து அல்லது காயங்கள் தவிர வேறு காரணங்களுக்காக இறந்தால், காயமடைந்தவரின் சொத்து இழப்புக்கு உரிமை கோரலாம் - அத்தகைய உரிமைகோரல் கோருரிமையாளருக்கு தனிப்பட்ட காயங்களிலிருந்து முற்றிலும் வேறுபட்டதாக இருக்கும் மற்றும் இது மரணத்திற்கு காரணமாக இருக்காது - தனிப்பட்ட காயங்களின் இத்தகைய கூற்றுக்கள் சந்தேகத்திற்கு இடமின்றி காயமடைந்தவர்களின் மரணத்துடன் குறையும் - காப்புறுதியாளருக்கு மோட்டார் விபத்து இழப்பீடு வழக்குகளில் இழப்பீடு வழங்குவதற்கான சட்டரீதியான கடமை உள்ளது - காயங்களினால் இறந்தவரின் சொத்திற்கு ஏற்பட்ட இழப்பைப் பொருட்படுத்தாமல், தனிப்பட்ட காயங்களுக்கு மட்டுமே இது கிடைக்கிறது மற்றும் அவரது மரணத்திற்குப் பிறகு நிவாரணம் கிடைக்கும் என்ற வாதத்தின் பின்னால் இந்த கடமையைத் தவிர்க்க முடியாது - உரிமைகோரல் மனு தாக்கல் செய்யப்பட்ட நாளிலிருந்து, அது நிறைவேறும் வரை ஆண்டுக்கு 9% வட்டியுடன் மொத்த இழப்பீடு ரூ.28,42,175/- என மறுமதிப்பீடு செய்யப்படுகிறது.

இம்மேல்முறையீட்டைபகுதியாக அனுமதித்து, இந்நீதிமன்றம்

தீர்வு 1.1: இச்சட்டம் ஒரு நன்மை பயக்கும் மற்றும் மக்கள் நலச்சட்டமாகும். மோட்டார் வாகனச் சட்டம், 1988 இன் பிரிவு 166 (1) (ஏ) விபத்தில் காயமடைந்த நபரால் ஏற்படும் இழப்பீட்டுக்கு சட்டரீதியான உரிமைகோரலை வழங்குகிறது. இந்த சட்டத்தின் கீழ், சொத்து என்பது வழக்கமான வரையறையை விட மிகவும் பரந்த அர்த்தத்தைக் கொண்டிருக்கும். கூறு (பி) இன் கீழ், சொத்தின் உரிமையாளருக்கு இழப்பீடு வழங்கப்படும். மரணம் ஏற்பட்டால், இறந்தவரின் சட்டப் பிரதிநிதிகள் உரிமைகோரலைத் தொடரலாம்.

சட்டப்பூர்வ வாரிசுகள் இறந்தால் உரிமைகோரல்களைத் தொடர முடியும் என்றால், பிரிவு 166 இன் கூறு 1 (சி) இன் கீழ் விபத்து அல்லது காயங்கள் தவிர வேறு காரணங்களுக்காக காயமடைந்தால், காயமடைந்தவரின் சொத்து இழப்புக்கான உரிமைகோரல்களை சட்டப் பிரதிநிதிகள் தொடர முடியாது என்பதற்கு எந்த காரணமும் இல்லை. அத்தகைய உரிமைகோரல் கோருரிமையாளருக்கு தனிப்பட்ட காயங்களிலிருந்து முற்றிலும் வேறுபட்டதாக இருக்கும், மேலும் இது மரணத்திற்கு காரணமாக இருக்காது. தனிப்பட்ட காயங்கள் குறித்த இத்தகைய கூற்றுக்கள் காயமடைந்தவர்களின் மரணத்துடன் சந்தேகத்திற்கு இடமின்றி குறைந்துவிடும். சொத்து இழப்பு என்றால் என்ன, அதில் என்னென்ன பொருட்கள் அடங்கும் என்பது கவனத்தை ஈர்க்க வேண்டிய விஷயங்கள். மோட்டார் விபத்து இழப்பீடு வழக்குகளில் இழப்பீடு வழங்க மேல்முறையீட்டாளருக்கு சட்டரீதியான கடமை உள்ளது. காயங்களினால் இறந்தவரின் சொத்திற்கு ஏற்பட்ட இழப்பைப் பொருட்படுத்தாமல், தனிப்பட்ட காயங்களுக்கு மட்டுமே இது கிடைக்கிறது மற்றும் அவரது மரணத்திற்குப் பிறகு நிவாரணம் கிடைக்கும் என்ற வாதத்தின் பின்னால் இந்த கடமையைத் தவிர்க்க முடியாது. [பத்தி 9][475-இ-எச்;476-ஏ]

1.2. விபத்தில் இறந்தவருக்கு ஏற்பட்ட காயங்களுக்கு ஆறு மாதங்கள் நீண்ட காலம் மருத்துவமனையில் சிகிச்சை தேவைப்பட்டது. 16.06.2000 அன்று ஊனத்தின் அளவு 100 சதவீதமாக மதிப்பிடப்பட்டது. 08.08.2002 அன்று இயல் மருத்துவத்தைத் தொடர்ந்து ஊனத்தின் அளவு 75 சதவீதமாக மறுமதிப்பீடு செய்யப்பட்டது. இடைப்பட்ட காலத்தில் காயமடைந்தவர் முற்றிலும் அசையாத நிலையில் இருந்ததாலும் வேறு ஒருவர் உதவியில்லாமல் இயங்க முடியாமல் இருந்ததாலும் அவர் கடந்த 30.09.2001ல் தனது 53வது வயதில் தனது வேலையை ராஜினமா செய்துள்ளார். காயம்பட்ட நபர் தொழிலாளர் மேலாண்மை சட்டம் மற்றும் தொழிலாளர் தனி நபர் மேலாண்மை சட்டத்தில் டிப்ளமோ பட்டம் பெற்றுள்ளார். தொழிலாளர் நீதிமன்றத்தின் முன்பு பணிபுரிவதிலும் அவர் சில

குறைபாடுகளை பெற்றிருக்கலாம், ஆனால் ஒரு உதவியாளரின் உதவியுடன் சக்கர நாற்காலி மூலம் ஆலோசனை மற்றும் பிற வேலைகளை வழங்குவதன் மூலம் சம்பாதிக்கும் திறனை எளிதாக்கும் அதனால் மேற்படி காரணமாக அவரை 100 சதவீதம் உடல் ஊனமுற்றவராக கருத இயலாது. காயமடைந்தவர் வாழ்வதற்கு அவரது சொத்தை அழிப்பதை தவிற வேறு வழியில்லை என்று முற்றிலும் ஏற்கமுடியாது. சட்டத்தின் கீழ் நியாயமான இழப்பீடு என்பதை விவரிக்கப்பட்டுள்ளதையும் அனைத்து சாத்திய கூறுகளையும், நிகழ்வுகளையும் மனதில் வைத்து மதிப்பிடப்படுகிறது. [பத்தி 17][478-சி-எப்]

1.3. தீர்பாயமானது காயம் பட்டவரின் சம்பளம், மருத்துவச்செலவுகள் மற்றும் இயலாமை சதவீதம் ஆகியவற்றிர்கான அவரது கோரிக்கையை தொழில் நுட்பங்களின்படி நிராகரித்து சொற்ப இழப்பீடான ரூபாய்.1,00,000/-ஐ குறுகிய உத்திரவின் மூலம் வழங்கியுள்ளது. எனவே மேல்முறையீட்டு நிலுவையில் இருக்கும்போது விபத்து அல்லது காயங்களுடன் தொடர்பில்லாத காயமடைந்தவரிகளின் மரணத்திற்கு பிறகு தனிப்பட்ட காயங்களுக்கான உரிமை கோரிக்கையானது எழாது என்று நாங்கள் கருதுகிறோம். ஆனால் ஏற்பட்ட சொத்து இழப்பிற்கான உரிமைகோரல் கிடைக்கும் மற்றும் இறந்தவரின் சட்டப்பிரதிநிதிகளால் தொடரமுடியும். [பத்தி 18][478- எப்-எச்]

1.4. சொத்து இழப்பு என்பது மருந்துகள், சிகிச்சை, உணவு, உதவியாளர், மருத்துவரின் கட்டணம் ஆகியவற்றிற்கான செலவுகளை குறிக்கும் என்றும், வருமானம் மற்றும் எதிர்கால வாய்ப்புகளையும் உள்ளடக்கும் என்றும், எதிர்கால வாய்புகளானது காயம்பட்டவரின் சொத்தின் நியாயமான சேர்மானத்தை உள்ளடக்கும் என்று ஒன்றிற்கும் மேற்பட்ட உயர் நீதிமன்றங்கள் எடுத்த நிலையான நீதிமன்ற தீர்மானிப்பில் இருந்து விலகுவதற்கான காரணத்தை நாங்கள் காணவில்லை. எவ்வாறாயினும், தலைவலி மற்றும் தாங்க முடியாத தனிப்பட்ட காயங்கள் காரணமாக ஏற்படும் இழப்பீடு நிலைக்கதக்கதல்ல மற்றும் அனுமதிக்கதக்கதல்ல. ஆறுமாதங்கள் மருத்துவமனையில் சிசிச்சையில் இருந்தும்

மருத்துவ செலவினங்கள் குறித்து உயர்நீதிமன்றம் எந்த உத்திரவும் வழங்கவிலலை என்பது ஒப்புக்கொள்ளப்பட்ட சங்கதியாகும். எனவே நாங்கள் மருத்துவ செலவுகள் தொடர்பாக ரூபாய். 1,00,000 த்தை இழப்பீடாக வழங்குகிறோம். அதனால், கீழ்கண்டவாறு மொத்த இழப்பீட்டை மறுமதிப்பீடு செய்கிறோம். எனவே, ரூபாய்.28,42,175-ஐ கோரிக்கை மனுதாக்கல் செய்த நாளிலிருந்து அவை செலுத்தப்படும்வரை ஆண்டுஒன்றிற்கு 9 சதவித வட்டியுடன் 1 ஆம் எதிர்மேல்முறையீட்டாளருக்கு நான்கு வாரகாலத்திற்குள் செலுத்தவேண்டும் என்று உத்திரவிடப்படுகிறது.

[பத்தி 20-22][479-பி-இ;480-ஏ]

கண்ணம்மா எதிர் துணை பொது மேலாளர், ஐ.எல்.ஆர் 1990 கர்நாடகா 4300; உத்தம் குமார் எதிர் மாதவ் மற்றும் ஒருவர், ஐ.எல்.ஆர் 2002 கர்நாடகா 1864; உமேத்சந்த் கோல்ச்சா எதிர். தயாராம் மற்றும் பலர், 2002(1) எம்.பி.எல்.ஜே 249; ப்ரவபதி கோஷ் மற்றும் ஒருவர் எதிர் கௌதம் தாஸ் மற்றும் பலர், 2009(4) ஜி.எல்.ஆர் 64; ராஜ் குமார் எதிர் அஜய் குமார் மற்றும் ஒருவர் , (2011) 1 எஸ்.சி.சி 343 : [2010] 13 எஸ்.சி.ஆர் 179; சுர்பால் சிங் லதுபா கோஹில் எதிர் ராலியத்பஹென் மோகன்பாய் சவ்லியா மற்றும் பலர் 2009(2) ஜி.எல்.எச் 217; முன்னி தேவி மற்றும் பலர் எதிர் நியூ இந்தியா அஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட், 103 (2003) டி.எல்.டி 464; வெங்கடேசன் எதிர் கஸ்தூரி, 2014 ஏ.சி.ஜே 1621;மைமுனா பேகம் மற்றும் பலர் எதிர் தாஜு மற்றும் பலர், 1989 எம் எச் எல் ஜே 352; பர்மிந்தர் சிங் எதிர் நியூ இந்தியா அஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட் மற்றும் பலர், (2019) 7 எஸ்.சி.சி 217 : [2019] 8 எஸ்.சி.ஆர் 986; காஜல் எதிர் ஜகதீஷ் சந்த் மற்றும் பலர் (2020) 4 எஸ்.சி.சி 413; மதுபென் மகேஷ்பாய் படேல் எதிர் ஜோசப் பிரான்சிஸ் மேவன் மற்றும் பலர், 2015 (2) ஜி.எல்.எச் 499; ஜோதி ராம் எதிர் சமன்லால், ஏ.ஐ.ஆர். 1985 பி & எச் 2; தாய்லம்மை எதிர் ஏ.வி.மல்லையா பிள்ளை, 1991 ஏ சி ஜே 185 (மெட்ராஸ்) ஆகியவை சார்வுறப்பட்டுள்ளது.

<u>பார்வையிடப்பட்ட தீர்முடிவுகள்</u>

ஐ.எல்.ஆர் 1990 கர்நாடகா 4300	பத்தி 4 இல்	குறிப்பிடப்பட்டுள்ளது
ஐ.எல்.ஆர் 2002 கர்நாடகா 1864	பத்தி 4 இல்	குறிப்பிடப்பட்டுள்ளது
2009(4) ஜி.எல்.ஆர் 64	பத்தி 4 இல்	குறிப்பிடப்பட்டுள்ளது
[2010] 13 எஸ் சி ஆர் 179	பத்தி 5 இல்	குறிப்பிடப்பட்டுள்ளது
103 (2003) டி எல் டீ 464	பத்தி 5 இல்	குறிப்பிடப்பட்டுள்ளது
[2019] 8 எஸ் சி ஆர் 986	பத்தி 5 இல்	குறிப்பிடப்பட்டுள்ளது
(2020) 4 எஸ்.சி.சி 413	பத்தி 5 இல்	குறிப்பிடப்பட்டுள்ளது
2002 (1) எம் பி எல் ஜே 249	பத்தி 10 இல்	குறிப்பிடப்பட்டுள்ளது
1989 எம் எச்எல் ஜே 352	பத்தி 11 இல்	குறிப்பிடப்பட்டுள்ளது
2014 ஏ சி ஜே 1621	பத்தி 12 இல்	குறிப்பிடப்பட்டுள்ளது
2009(2) ஜி.எல் எச் 217	பத்தி 13 இல்	குறிப்பிடப்பட்டுள்ளது
2015 (2) ஜி.எல் எச் 499	பத்தி 14 இல்	குறிப்பிடப்பட்டுள்ளது
ஏ ஐ ஆர் 1985 பி & எச் 2	பத்தி 14 இல்	குறிப்பிடப்பட்டுள்ளது
1991 ஏ சி ஜே 185 (மெட்ராஸ்)	பத்தி 15 இல்	குறிப்பிடப்பட்டுள்ளது

சண்டிகரில் உள்ள பஞ்சாப் மற்றும் ஹரியானா உயர் நீதிமன்றத்தின் எஃப்.ஏ.ஓ எண்.1386/2007, 27.08.2019 தேதியிட்ட தீர்ப்புரை மற்றும் ஆணையிலிருந்து.

மேல்முறையீட்டாளர்களுக்காக வழக்கறிஞர் எச்.சந்திர சேகர்.

எதிர்மேல்முறையீட்டாளர்களுக்காக வழக்கறிஞர் நிகில் கோயல்.

நீதிமன்றத்தின் தீர்ப்புரையை பின்வருமாறு மாண்புமிகு நீதியரசர் திரு . நவின் சின்ஹா வழங்கினார்

1. அனுமதி வழங்கப்பட்டது.

2. ஒரு மோட்டார் வாகன விபத்தில் ஏற்பட்ட காயத்தின் தொடர்பான இழப்பீடு கோரிக்கையானது இந்நீதிமன்றத்தின் முன்பாக 20 ஆண்டுகளுக்கு பிறகு அதன் பலனை எட்டியுள்ளது, அவை மிகவும் துன்பகரமானது ஆகும். மேற்படி பலனை அசல் கோருரிமையாளர் மற்றும் அவரது மனைவி இருவரும் அதனை பார்ப்பதற்கு உயிருடன் இல்லை, அவை தற்போது அவர்களின் மகளால் தொடர்ந்து கொண்டிருக்கிறது.

3. இந்த வழக்கின் சுருக்கமான உண்மைகள் என்னவென்றால், அசல் கோருரிமையாளர் 02.05.1999 அன்று ஒரு மோட்டார் விபத்தில் கடுமையாக காயமடைந்தார். மோட்டார் வாகனச் சட்டம், 1988 இன் பிரிவு 166 (1) (ஏ) இன் கீழ் இழப்பீடு கோரி அவர் மனு தாக்கல் செய்தார் (இனி 'சட்டம்' என்று குறிப்பிடப்படுகிறது). 02.11.2006 அன்று மோட்டார் விபத்து இழப்பீடு தீர்ப்பாயம் அவருக்கு 9% வட்டியுடன் ரூ.1,00,000/- வழங்கியது. மேற்படி தீர்பானை உத்திரவால் அதிர்ப்தியுற்ற கோருரிமையாளர் உயர் நீதிமன்றத்தில் மேல்முறையீடு தாக்கல் செய்துள்ளார் மேற்படி மேல் முறையீடு நிலுவையில் இருந்போதே துரதிஸ்டவசமாக அவர் கடந்த 06.11.2015-ல் காலமாகியுள்ளார் ஆனால் அதற்கு விபத்தினால் ஏற்பட்ட காயங்கள் காரணமல்ல. விபத்தின்போது 21 வயது பூர்த்தியடைந்த திருமணமாகாத மகள் கோருரிமையாளருக்கு இருந்துள்ளார் அவரை மேற்படி மேல்முறையீட்டில் தரப்பினராக சேர்க்கப்பட்டுள்ளார். பின்னர் உயர் நீதிமன்றம் கணிசமாக இழப்பீட்டை உயர்தியுள்ளது.

4. அப்போது மேல்முறையீட்டாளர் தரப்பில் ஆஜரான வழக்கறிஞர் எச்.சந்திரசேகர் வாதிடுகையில், காயமடைந்தவரின் மரணம் விபத்தால் ஏற்பட்டதல்ல. இறந்தவரின் சொத்தின் ஒரு பகுதியாக இருக்கும் அத்தகைய இழப்பீட்டிற்கு மட்டுமே சட்டப்பூர்வ வாரிசுக்கு உரிமை உண்டு. வருமான இழப்பு, எதிர்கால வாய்ப்புகள், வலி மற்றும்

உதிவியாளார்களின் கட்டணத்துடன் துன்பப்டுதல் ஆகியவைகள் இறந்தவரின் விடுபட்ட சொத்துக்களின் பகுதியாகது. இது விபத்தினால் ஏற்பட்ட அல்லது நிகழ்வால் ஏற்பட்ட மரணம் அல்ல என்பதால் பன்மடங்கு பயன்படுத்துவதன் மூலம் இழப்பீடு நிர்ணயிக்கப்பட்டிருக்க முடியாது. தீர்ப்பாயம் வழங்கும் தொகை மட்டுமே இறந்தவரின் சொத்தின் ஒரு பகுதியாக இருக்கும். மேற்படி சங்கதிகள் தொடர்பாக கர்நாடகா உயர்நீதிமன்றத்தின் முழு ஆயத்தின் இரண்டு தீர்ப்புகளை முன்வைத்துள்ளார், **கனம்மா எதிர் துணை பொது மேலாளர், ஐ.எல்.ஆர் 1990 கர்நாடகா 4300, உத்தம் குமார் எதிர் மாதவ் மற்றும் இன்னொன்று, ஐ.எல்.ஆர் 2002 கர்நாடகா 1864, உமேத்சந்த் கோல்ச்சா எதிர் தயாராம் மற்றும் மற்றவர்கள், 2002(1) எம்.பி.எல்.ஜே 249, பிரவாபதி கோஷ் மற்றும் மற்றொருவர் எதிர் கவுதம் தாஸ் மற்றும் மற்றவர்கள், 2009(4) ஜி.எல்.ஆர் 64.** எதிர்மேல்முறையீட்டாளர் திருமணமானவர் என்பதாலும் அவர் இறந்தவரை சார்ந்திருக்கவில்லை என்பதனாலும் அவர் இறந்தவரின் வேறு இழப்புகளிலிருந்து எவ்வித இழப்பு கோரிக்கையும் பெற உரிமையும் இல்லை. உயர் நீதிமன்றம் இழப்பீட்டு தொகையில் மூன்றில் ஒரு பங்கை இறந்தவரின் தனிப்பட்ட செலவுகளுக்கு பிடித்தம் செய்ய தவறியுள்ளது என்று இறுதியாக சமர்ப்பித்தார்.

5. முதல் எதிர்மேல்முறையீட்டாளர் சார்பாக ஆஜரான கற்றரிந்த வழக்குரைஞர் திரு. நிகில் கோயல் இறந்தவர் தனது வாழ்நாளில் செலவுகளைச் செய்ததால் தனிப்பட்ட செலவுகளுக்கு எந்த விலக்கும் அளிக்க முடியாது என்று வாதிடுகிறார் **ராஜ்குமார் எதிர் அஜய்குமார் மற்றும் ஒருவர், 2011(1) எஸ் சி சி 343** -ஐ சார்ந்து, நிகழ்ந்த ஒரு வழக்கில் மட்டுமே விலக்கு அளிக்கப்பட வேண்டும். மேலும் அவர் சமர்ப்பிக்கையில் இந்த இழப்பீட்டு கோரிக்கையானது காயங்கள் தொடர்பானது மட்டுமே என்றும் மற்றும் அவை இறந்தவரின் மரணத்துடன் முடியும் என்று சமர்ப்பித்தார். வருமான இழப்பு மருத்துவ செலவுகள் முதலியன சொத்திழைப்பின் ஒரு பகுதியாக நிலைத்திருக்கும் என்றும் மேற்படி சங்கதிகள்

தொடர்பாக அவர் கீழ்கண்ட தீர்ப்புகளை சுட்டிகாட்டினார். **சர்பால் சிங் லதுபா கோகில் எதிர் ராலியட்பகென் மோகன்பாய் சௌலியா மற்றும் பலர்,2009(2)ஜிஎச்எல் 217, முன்னி தேவி மற்றும் பலர் எதிர் நியூ இந்தியா அஸ்யூரன்ஸ் கம்பணி லிமிடெட்,103(2003)டி எல் டி 464, வெங்கடேசன் எதிர் கஸ்தூரி. 2014 ஏ சி ஜெ 1621 மற்றும் மைமுனா பேகம் மற்றும் பலர் எதிர் தாஜு மற்றும் பலர், 1989 எம் எச் எல் ஜெ 352**. மேலும் முதல் எதிர் மேல்முறையீட்டாளரின் வழக்குரைஞர் சமர்ப்பிக்கையில் உயர் நீதிமன்றம் வருமான இழப்பு அதனுடன் எதிர் கால இழப்புகள் குறித்து பெருக்குதலில் இழப்பீடு வழங்கியதில் எவ்வித குறையும் செய்யவில்லையென்று சமர்ப்பித்தார் மேலும் மேற்படி சங்கதிகள் தொடர்பாக கீழ்கண்ட தீர்ப்புகளை சுட்டிகாட்டியுள்ளார். **பர்மீந்தர் சிங் எதிர் நியூ இந்திய அஸ்யூரன்ஸ் கம்பணி லிமிடெட் மற்றும் பலர் (2019) 7 எஸ் சி சி 217 மற்றும் காஜல் எதிர் ஜெகதீஸ் சந்த் மற்றும் பலர் (2020) 4 எஸ் சி சி 413**. காயம்பட்டவர் 100 சதவிகிதம் ஊனத்தால் பாதிக்கப்பட்டுள்ளார். அவர் தனது வாழக்கையும் தொழிலையும் தொடரமுடியாமல் தனது வேலையை விட்டுவிட்டு தனது சொந்த ஊரான பஞ்சாப்பிற்கு மாறியுள்ளார். அவர் ஒரு சட்டப் பட்டதாரியாக இருந்தும் மற்றும் தொழிலாளர் சட்டத்தில் டிப்ளமோ பட்டம் பெற்றிருந்தாலும், அவரின் முழுமையான உடல் ஊனத்தின் காரணமாக அவரால் எந்தவொரு சுதந்திரமான தொழிலையும் தொடர முடியவில்லை. எனவே, உயர் நீதிமன்றத்தால் உயர்த்தப்பட்ட இழப்பீடு, தனிப்பட்ட காயங்கள் காரணமாக அல்ல, மாறாக இறந்தவரின் சொத்து இழப்பாகும், எனவே, எந்த தலையீடும் தேவையில்லை.

6. நாங்கள் இருதரப்பு வாதுரைகளையும் பரிசீலித்தோம். அசல் கோருரிமையாளர் கடந்த 02.05.1999 தேதியில் அவரது மனைவி மற்றும் பெண் குழந்தையுடன் அவருடை வாகனத்தில் பயணித்தபோது, கவனக்குறைவாகவும் மற்றும் அதிவேகமாக வந்த லாரி அவர்களின் மீது மோதியதால் விபத்து ஏற்பட்டுள்ளது. கோருரிமையாளர் திருவனந்தபுரம் அரசு மருத்துவமனைக்கு எடுத்து செல்லப்பட்டுள்ளார் ஆனால் அவருக்கு இருந்த

அதிகபடியான காயத்தினால் மறுநாள் சென்னை அப்போலோ மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார். அங்கு அவர் 24.11.1999 ஆம் தேதிவரையில் சிகிச்சையில் இருந்துள்ளார். அவர் முதுகெலும்பு அதிர்ச்சி, முள்ளந்தண்டு வடக்காயம் மற்றும் சுவாச செயலிழப்புடன் நாலங்கவாதம் ஆகியவற்றால் பாதிக்கப்பட்டார். அவர் புத்துயிர் பெற்று மண்டை ஓடு இழுவைக்காக வென்டிலேட்டர் உதவியுடன் வைக்கப்பட்டார். அவரது வலது கணுக்காலுக்கு அறுவை சிகிச்சை தேவைப்பட்டுள்ளது, மேலும் அவருக்கு முன்புற அழுத்த நீக்கம், வட்டுநீக்கம் மற்றும் எலும்பு ஒட்டுதல் ஆகியவற்றிற்கு கூடுதல் சிகிச்சை தேவைப்பட்டுள்ளது. அவருடைய உடல் செயல்பாடுகள் சக்கர நாற்காலியின் மூலம் நடந்துள்ளது. கடந்த 16.06.2000 தேதியில் கடலூர் அரசு மருத்துமனையால் வழங்கப்பட்ட சான்றில் அவருக்கு 100 சதவீதம் நிரந்தர உடல் ஊனமானது வலது பக்க கழுத்து வலது கணுக்காலில் அறுவை சிகிச்சை செய்த காயத் தழும்புடனும், வலது பக்க முன்தலையும் முன்பகுதி மற்றும் தலை நடுப்பகுதியில் குணமான வடுக்களுடன் மற்றும் நான்கு மூட்டுகளையும் தூக்கமுடியாத உணர்திறன் இழப்புடன் கூடிய எலும்பு பக்கவாதத்துடன் பாதிக்கப்பட்டுள்ளதாக கருத்துரைக்கப்பட்டுள்ளது.

7. இந்த கோருரிமையாளர் பஞ்சாப் பல்கலைக்கழகத்தில் தனிநபர் மேலான்மை மற்றும் தொழிலாளர் நலனில் டிப்ளமோ பட்டம் பெற்ற சட்டப் பட்டதாரி ஆவார்.. காயங்கள் காரணமாக, அவர் தனது துணை பொது மேளாலர் பணியை தொடர்வதற்கு கடினமாகவும், சிரமமாகவும் இருப்பதாக கருதியதன் காரணமாக கடந்த 30.04.2006 அன்று அவரது ஓய்வு பெறும் நாளுக்கு முன்னதாகவே அவர் கடந்த 30.09.2001 தேதியன்று தனது 53வது வயதில் ராஜினாமா செய்துள்ளார். கடலூரில் ஏற்பட்ட சூழ்நிலையின் மாற்றத்தின் காரணமாக அவரால் சிகிச்சை மற்றும் குடும்ப செலவுகளின் சுமையுடன் தனது வாழ்க்கையை தொடரமுடியாமல், அவர் கடலூரில் கடந்த 2000ல் தாக்கல் செய்த கோரிக்கை மனுவை மாற்றம் செய்ய டி.பி.எண்.1043/2003 மனுவை தாக்கல் செய்து கடந்த

25.02.2004ல் அனுமதிக்கப்பட்டு அதன் அனைத்து நடவடிக்கைகளும் பஞ்சாப்பில் உள்ள குர்தாஸ்பூருக்கு மாற்றப்பட்டுள்ளது.

8. தீர்பாயமானது ரூபாய் 1 லட்சத்தை 9 சதவீத வட்டியுடன் சேர்த்து அளிக்கவேண்டும் என்று தெளிவற்றும், மேலோட்டமாகவும் உத்திரவிட்டுள்ளது. பிறகு கோருரிமையாளர் உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தார், அதில் அவரது வருடாந்திர சம்பளத்தை கணக்கில் கொண்டு வலி மற்றும் துன்பம், உதவியாளர் கட்டணங்கள் உட்பட 11 மடங்கு அதிகரிப்பைப் பயன்படுத்தி இழப்பீட்டை ரூ.37,81,234/- ஆக உயர்த்தியுள்ளது.

9. இந்த சட்டம் ஒரு நன்மை பயக்கும் மற்றும் பொதுநல சட்டமாகும். இந்த சட்டத்தின் பிரிவு 166(1)(ஏ) ஆனது விபத்தினால் காயத்திற்கு உள்ளான நபரின் இழப்பீட்டிற்கான சட்டப்பூர்வ கோரிக்கையை வழங்குகிறது. கூறு (பி)-ன் கீழ், சொத்தின் உரிமையாளருக்கு இழப்பீடு வழங்கவேண்டும். மரணம் ஏற்பட்டால், இறந்தவரின் சட்டப்பிரதிநிதிகள் கோரிக்கையை தொடரலாம். சொத்து, இந்த சட்டத்தின் கீழ் வழக்கமான வரையறையைவிட மிகவும் பரந்த பொருளை கொண்டிருக்கும். மரணம் ஏற்பட்டால் அவரின் சட்டப்பூர்வ வாரிசுகள் உரிமை கோரலை தொடரமுடியும் என்றால், விபத்து அல்லது காயங்களுக்கு காரணமான பிற காரணங்களுக்காக அவர் இறந்தால் காயமடைந்தவரின் சொத்திற்கு நிகரான சொத்து இழப்புக்கான உரிமை கோரலை சட்டப்பிரதிநிதிகளால் தொடரமுடியாது என்பதற்கான காரணத்தை நாங்கள் காணவில்லை. பிரிவு 166ன் 1(சி) அத்தகைய உரிமை கோரல் கோருரிமையாளர் தனிப்பட்ட காயங்களிலிருந்து முற்றிலும் வேறுபட்டதாக இருக்கும், மேலும் இது மரணத்திற்கு காரணமாக இருக்காது. தனிப்பட்ட காயங்கள் பற்றிய இத்தகைய கூற்றுகள் சந்தேகத்திற்கு இடமின்றி காயமடைந்தவர்களின் மரணத்துடன் குறையும். சொத்து இழப்பு என்றால் என்ன, அதில் என்னென்ன பொருட்கள் அடங்கும் என்பது நமது கவனத்தை ஈர்க்க வேண்டிய பிரச்சினைகள். மோட்டார் விபத்து கோரிமை வழக்குகளை இழப்பீடு வழங்குவதற்கு மேல்முறையீடு செய்பவருக்கு சட்டரீதியான கடமை

உள்ளது. காயங்களால் இறந்தவரின் சொத்துக்கு ஏற்பட்ட இழப்பைப் பொருட்படுத்தாமல், தனிப்பட்ட காயங்களுக்கு மட்டுமே அது கிடைக்கிறது மற்றும் அவரது மரணத்திற்குப் பிறகு நிவாரணம் கிடைக்கும் என்ற வாதத்திற்குப் பின்னால் இந்த கடமையைத் தவிர்க்க முடியாது.

10. உமேட் சந்த் வழக்கில் (மேலே கூறப்பட்டவாறு) சட்டப் பிரதிநிகளுக்கு அநீதி இழைக்காமல் இருக்க சட்டத்தின் விதிகளுக்கு ஒரு பரந்த விளக்கத்தையும் அளித்து மற்றும் விபத்துடன் தொடர்பில்லாத காயம் பட்டவர்களின் மரணத்துடன் உரிமை கோரிக்கையானது முடிவடையும் என்றும் ஆனால் அவர்களின் சட்டபிரதிநிதிகள் சொத்து இழப்பிற்கான மருத்துவ செலவுகள், பயணம் உதவியாளர், உணவு பழக்கம், மருத்துவர் கட்டணம் மற்றும் ஒரு குறிப்பிட்ட காலத்திற்கான நியாயமான மாதாந்திர, வருடாந்திர சேர்க்கை ஆகியவற்றிற்கான செலவினங்கள் உள்ளடக்கிய சொத்து இழப்பிற்கான கோரிக்கையை உயர்த்தி பெறுவதற்கு சட்டப்பிரதிநிதிகள் தொடரலாம் என்று தீர்மானித்துள்ளது. ஒரு நபர் பெறும் வருமானம் தனக்கும் தன் குடும்பத்திற்கும் ஆகும் செலவில் ஒரு பகுதியாக அமைகிறது என்பதும் மற்றும் சேமிப்பானது சொத்தாகும் என்பது உண்மை. மேற்கூறிய எதிர்பாராத செலவுகள் சொத்திலிருந்து இயற்கையாகவே ஈடுசெய்யப்படவேண்டும் அதன் காரணமாக சொத்திற்கு பண இழப்பு ஏற்படும்.

11. மைமூனா பேகம் வழக்கில் (மேலே கூறப்பட்டவாறு) இந்திய வாரிசுரிமை சட்டம் 1925ன் பிரிவு 306ன் கீழ் பழைய ஆங்கில சட்டத்தின் "ஆள்நிலை வழக்கு ஆளுடன் முடியும்" கோட்பாடானது வழக்கில் இல்லாத வாரிசுகளுக்கு பொருந்தாது என்றும் அது நியாயமற்றது என்று கருத்து தெரிவித்து மேற்படி கோட்பாடு நிராகரிக்கப்பட்டுள்ளது.

12. வெங்கடேசன் வழக்கில் (மேலே விவரிக்கப்பட்ட) காயமடைந்த உரிமை கோரூபவர் திருப்தியடையாததன் காரணமாக மேல்முறையீட்டால் மேலும் மேல்முறையீடு நிலுவையில் இருந்தபோது இறந்தால் காயங்களின் தன்மை, சிகிச்சை ஏற்படும் செலவு மற்றும் வருமான இழப்பு ஆகியவற்றை கருத்தில்கொண்டு சொத்து இழப்பிற்கான

இழப்பீடானது சட்டத்தின் வழங்கப்பட்டுள்ளது.

13. சுப்ரால் சிங் வழக்கில் (மேலே விவரிக்கப்பட்ட) நீதியரசர் கே.எஸ்.ராதாகிருஷ்ணன், தலைமை நீதியரசர் இந்த சட்டம் ஒரு சமூக நல சட்டம் என்றும், உடல் காயங்கள் அல்லது மரணிப்பவர்களுக்கு இழப்பீடு வழங்குவதாகவும், இந்த சட்டத்தின் நியாயமான நோக்கத்தை தோள்வியுறச்செய்யும் நடைமுறை தொழில் நுட்பங்களை அனுமதிக்காமல் இழப்பீடு வழங்குவதை துரிதப்படுத்தப்பட வேண்டியுள்ளது என்றும் சமூக நல சட்டங்களை நீதிமன்றங்கள் சட்டம் யாருடைய நலனுக்காக ஏற்றப்பட்டதோ அவர்களுக்கு சாதகமான சட்டத்தின் கொள்கையை நிறைவேற்றும் விதியை ஏற்கவேண்டும் என்றும் சட்டத்தின் மூலம் நிவாரணத்தை பாதுகாப்பதற்காக நியாயமான முறையில் ஒப்புக்கொள்ளும் வகையில் நிவாரண சட்டங்களின் வார்த்தைகள் புரிந்துக் கொள்ளப்பட வேண்டும். மேலும் "ஆள்நிலை வழக்கு ஆளுடன் முடியும்" கோட்பாடானது அந்நபருக்கு ஏற்பட்ட காயம் தொடர்பான கோரிக்கை அவரது இறப்புடன் முடியும் என்பது நீக்கரவு செய்யப்பட்டு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

> “11.கேள்வியானது காயமானது தனிப்பட்டதா அல்லது வேறு வகையிலா என்ற கேள்விக்கு எந்த முக்கியத்துவமும் இல்லை. மேலும் காயம் அடைந்தவர்களால் ஏற்பட்ட இழப்பை சரிசெய்ய அவர் கடமைபட்டிருக்கிறார். சட்டப்பூர்வ வாரிசுகள் மற்றும் சட்டப்பிரதிநிதிகள் தங்கள் உறவினர்களுக்கு ஏற்பட்ட விபத்து காரணமாக கனிசமாக மனவேதனையையும், வேதனையையும் அனுபவித்து இருப்பார்கள். அவர்கள் தங்களது பிடித்தமானவர்களை வேவ்வேறு சூழ்நிலைகளில் கவனித்திருக்கலாம் அவைகளை பண அளவில் அளவிடமுடியாது எனவே குஜராத் மாநில சாலை போக்குவரத்து கழக(மேலே விவரிக்கப்பட்ட) வழக்கில் இந்த நீதிமன்றத்தில் கற்றறிந்த தனி நீதிபதி அவர்கள், காயமடைந்தவர்கள் இறந்தபிறகும் அவர்களது கோரிக்கையானது முடிந்துவிடாது என்றும் மற்று வழக்கு

நடப்பதற்கான உரிமையானது அவர்களது சட்ட வாரிசுகள் மற்றும் சட்டப்பிரதிநிதிகளுக்கு உள்ளது என்று ஒப்புக்கொண்டு கருத்துரைக்கப்பட்டுள்ளது."

14. மேற்கூறிய கருத்தை சகோதரர் நீதியரசர் எம்.ஆர்.ஷா அவர்கள் **மதுபென் மகேஷ்பாய் பட்டேல் /எதிர்/ ஜோசப் பிரன்சிஸ் மேவான் மற்றும் பலர் 2015 (2) ஜி.எல்.எச் 499** என்ற வழக்கில் பின்பற்றியுள்ளார். அவைகள் கீழ்கண்டவாறு

12. சுர்பால் சிங் லதுபா கோஹில் (மேலே) வழக்கில் இந்த நீதிமன்றத்தின் இரு நீதிபதிகள் ஆயத்தின் முடிவையும் மற்றும் இந்த நீதிமன்றத்தின் கற்றரிந்த தனி நீதிபதியின் அப்துல் கரீம் முசாவின்(மேலே) ஜனாபாய் விதவை மற்றும் அம்ரிஸ் குமார்(மேலே), வினோத் பாய் (மேலே) என்ற வழக்குகளின் முடிவுகளும் மற்றும் மேலே கூறப்பட்ட ராஜஸ்தான் உயர்நீதிமன்றத்தின் தனி நீதிபதியின் மேற்கூறிய இரண்டு தீர்ப்புரைகளின் முடிவுகளை கருத்தில் கொள்ளும்போது நாங்கள் "ஆள்நிலை வழக்கு ஆளுடன் முடியும்" கோட்பாடு இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 300ன் சட்டத்தின் அடிப்படையானது தலையின் கீழே ஏற்பட்ட இழப்புகள் தொடர்பான தனிப்பட்ட காயங்கள் வழக்கிலும், வழக்குகளுக்கு அனைத்து செயல்களிலும் பொருந்தாது என்று நாங்கள் கருதுகிறோம். அதனால் காயம்பட்ட கோரூரிமை மேல்முறையீட்டாளர் இறந்த பிறகும், கோரூரிமை மனு முடிவடையாது என்றும் மற்றும் வழக்கு தொடர்வதற்கான உரிமையானது அவருடைய வாரிசு மற்றும் சட்டப்பிரதிநிதிகளிடம் சொத்து இழப்புதொடர்பாகவும் தொடரும், அவை தனிப்பட்ட செலவுகளில் மருத்துவ செலவுகளும் வேறு சொத்து இழப்பு தொடர்பான இழப்புகளும் உள்ளடங்கும் என்றும் மேற்கண்ட சூழ்நிலைகளில் இரு நீதிபதிகள் ஆயத்தின் முன் வைக்கப்பட்ட பிரச்சினைக்கு மேற்கண்டவாறு பதில்

அளிக்கப்படுகிறது. பின்னர் கோரூரிமை மனுவில் அவரது வாரிசுகளை தரப்பினராக அனுமதித்ததற்கும், மேற்படி காயம்பட்ட கோரூரிமையாளர் இறந்த பின்பு மேற்கொண்டு நடத்த அனுமதி வழங்கப்பட்டதில் தீர்ப்பாயம் அந்த தவறையும் மேற்கொள்ளப் படவில்லை என்று தீர்மானிக் கப்படுகிறது. இருப்பினும் கோரூரிமை மனு மற்றும் சொத்து இழப்பிற்கு உயர் கோரிக்கை மேல்முறையீட்டுக்கு மட்டுமே இருக்கும் என்று மேலே கூறப்பட்டவாறு கருதப்படுகிறது.

15. **ஜோதிராம் /எதிர்/ சமன்லால் ஏஐஆர் 1985 ப&ஹ2** என்ற பஞ்சாப்ஹரியானா உயர்நீதிமன்றமும் மற்றும் **தைலம்மை /எதிர்/ ஏ.வி.மல்லைய பிள்ளை 1991 ஏசிஜெ 185(மெட்ராஸ்)** என்ற சென்னை உயர்நீதிமன்றமும் மேற்கண்டவாறு நடைமுறையை எடுத்துள்ளது.

16. மேலே விவரிக்கப்பட்ட **கண்ணம்மா மற்றும் உத்தம்குமார்** ஆகிய வழக்குகளில் கோரிக்கையானது கைவிடப்பட்டது என்று தீர்மானிக்கப்பட்டவை என்பது சட்டத்தின் குறுகிய விளக்கத்தை அடிப்படையாக கொண்டதாகும். அவை நம்மை பாராட்டுவதில்லை. குஜராத் உயர் நீதிமன்றத்தின் பகுத்தறிவு, சட்டத்தின் நோக்கம், நோக்கம் மற்றும் உணர்வு ஆகியவற்றுடன் மிகவும் ஒத்துபோகிறது. மேலும் அதன் உண்மையான நோக்கம் மற்றும் நோக்கத்தை நாங்கள் அங்கீகரிக்கிறோம்.

17. இறந்தவருக்கு விபத்தினால் அவருக்கு ஏற்பட்ட காயத்தினால் அவர் ஆறு மாதங்கள் வரையில் மருத்துமனையில் இருக்க வேண்டியிருந்துள்ளது. பாதிக்கப்பட்டவரின் இயலாமையின் அளவு 100 சதவீதம் என கடந்த 16.06.2000ல் மதிப்பிடப்பட்டுள்ளது. இயலாமையின் அளவு இயன்முறை சிகிச்சையின்படி கடந்த 08.08.2000 தேதியில் 75 சதவீதம் என மறுமதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. இடைப்பட்ட காலத்தில் காயமடைந்தவர்

முற்றிலும் அசையாத நிலையில் இருந்ததாலும் வேறு ஒருவர் உதவியில்லாமல் இயங்க முடியாமல் இருந்ததாலும் அவர் கடந்த 30.09.2001ல் தனது 53வது வயதில் தனது வேலையை ராஜினமா செய்துள்ளார். காயம்பட்ட நபர் தொழிலாளர் மேலாண்மை சட்டம் மற்றும் தொழிலாளர் தனி நபர் மேலாண்மை சட்டத்தில் டிப்ளமோ பட்டம் பெற்றுள்ளார். தொழிலாளர் நீதிமன்றத்தின் முன்பு பணிபுரிவதிலும் அவர் சில குறைபாடுகளை பெற்றிருக்கலாம், ஆனால் ஒரு உதவியாளரின் உதவியுடன் சக்கர நாற்காலி மூலம் ஆலோசனை மற்றும் பிற வேலைகளை வழங்குவதன் மூலம் சம்பாதிக்கும் திறனை எளிதாக்கும் அதனால் மேற்படி காரணமாக அவரை 100 சதவீதம் உடல் ஊனமுற்றவராக கருத இயலாது. காயமடைந்தவர் வாழ்வதற்கு அவரது சொத்தை அழிப்பதை தவிற வேறு வழியில்லை என்று முற்றிலும் ஏற்கமுடியாது. சட்டத்தின் கீழ் நியாயமான இழப்பீடு என்பதை விவரிக்கப்பட்டுள்ளதையும் அனைத்து சாத்திய கூறுகளையும், நிகழ்வுகளையும் மனதில் வைத்து மதிப்பிடப்படுகிறது.

18. தீர்பாயமானது காயம் பட்டவரின் சம்பளம், மருத்துவச்செலவுகள் மற்றும் இயலாமை சதவீதம் ஆகியவற்றிர்கான அவரது கோரிக்கையை தொழில் நுட்பங்களின்படி நிராகரித்து சொற்ப இழப்பீடான ரூபாய்.1,00,000/-ஐ குறுகிய உத்திரவின் மூலம் வழங்கியுள்ளது. எனவே மேல்முறையீட்டு நிலுவையில் இருக்கும்போது விபத்து அல்லது காயங்களுடன் தொடர் பில்லாத காயமடைந்தவரிகளின் மரணத்திற்கு பிறகு தனிப்பட்ட காயங்களுக்கான உரிமை கோரிக்கையானது எழாது என்று நாங்கள் கருதுகிறோம். ஆனால் ஏற்பட்ட சொத்து இழப்பிற்கான உரிமைகோரல் கிடைக்கும் மற்றும் இறந்தவரின் சட்டப்பிரதிநிதிகளால் தொடரமுடியும்.

19. **பர்மீந்தர் சிங்** (மேலே விவரிக்கப்பட்ட) வழக்கில் முழுமையான வருமான இழப்பு இயலாமையின் பாதிப்பு சதவீதம் எதிர்கால வாய்ப்புகள் ஆகியவை தொடர்புடைய உரிய பெருக்குதலை பயன்படுத்தி இழப்பீடு வழங்கப்பட்டுள்ளது. மீண்டும், **காஜல்** (மேலே

விவரிக்கப்பட்ட) வழக்கில் காயம்பட்டவர் 100 சதவீதம் உடல் ஊனமுற்றவராக மதிப்பிடப்பட்டுள்ளார், அவை அனைத்தும் கருத்தில் கொண்டு உரிய பெருக்குதலில் கற்பனையான எதிர்கால வாய்ப்புகள் அடிப்படையில் இழப்பீடு வழங்கப்பட்டுள்ளது. இந்த வழக்கில் காயம் பட்டவரின் வருமான இழப்பு ஆனது 75 சதவீதம் என் மதிப்பிடப்பட்டுள்ளது. மேலே விவரிக்கப்பட்ட **ராஜ்குமார்** வழக்கின் முடிவின்படி தனிப்பட்ட செலவுகளில் எவ்வித கழிவுகளும் இருக்காது.

20. சொத்து இழப்பு என்பது மருந்துகள், சிகிச்சை, உணவு, உதவியாளர், மருத்துவரின் கட்டணம் ஆகியவற்றிற்கான செலவுகளை குறிக்கும் என்றும், வருமானம் மற்றும் எதிர்கால வாய்ப்புகளையும் உள்ளடக்கும் என்றும், எதிர்கால வாய்ப்புகளானது காயம் பட்டவரின் சொத்தின் நியாயமான சேகரத்தை உள்ளடக்கும் என்று ஒன்றிற்கும் மேற்பட்ட உயர் நீதிமன்றங்கள் எடுத்த நிலையான நீதிமன்ற தீர்மானிப்பில் இருந்து விலகுவதற்கான காரணத்தை நாங்கள் காணவில்லை.

21. எவ்வாறாயினும், தலைவலி மற்றும் தாங்க முடியாத தனிப்பட்ட காயங்கள் காரணமாக ஏற்படும் இழப்பீடு நிலைக்கதக்கதல்ல மற்றும் அனுமதிக்கதக்கதல்ல. ஆறுமாதங்கள் மருத்துவமனையில் சிசிச்சையில் இருந்தும் மருத்துவ செலவினங்கள் குறித்து உயர்நீதிமன்றம் எந்த உத்திரவும் வழங்கவிலலை என்பது ஒப்புக்கொள்ளப்பட்ட சங்கதியாகும். எனவே நாங்கள் மருத்துவ செலவுகள் தொடர்பாக ரூபாய். 1,00,000 த்தை இழப்பீடாக வழங்குகிறோம். அதனால், கீழ்கண்டவாறு மொத்த இழப்பீட்டை மறுமதிப்பீடு செய்கிறோம். எனவே, மறுமதிப்பீடு செய்யப்பட்ட மொத்த இழப்பீட்டுத் தொகை ரூ.28,42,175/- ஆகும்.

வ. எண்	தலைப்புகள்	கணக்கீடுகள்
1	ஆண்டு சம்பளம்	ரூபாய்.25084 * 12 = ரூபாய்.3,01,008/- 25 சதவீதம் கழித்தபின்பு 75 சதவீதம் ஆண்டு சம்பளம் ரூ.2,25,756/-
2	15 சதவீதம் எதிர்கால செலவுகள்	15 சதவீதம் -ன் 2,25,756/- = ரூ.33,863.4 ரூ.2,25,756+33,863 = ரூ.2,59,619/-
3	11-ஆல் பெருக்குதல்	ரூ.2,59,619 * 11 = ரூ.28,55,809/-
4	10 சதவீதம் வருமான வரி 15 ஆண்டுகளுக்கு பிடித்தம் செய்யப்பட்டும்	ரூ.2,25,756 – 1,50,000 = 75,756/- 10 சதவீதம் ரூ.75,756 = 7575.60 15 வருடங்கள் 7575.60 * 15 = ரூ.1,13,634/-
5	மருத்துவ செலவுகள்	ரூ.1,00,000/-
6	உதவியாளர் செலவுகள்	ரூ.1,00,000/-
7	மொத்தம் தொகை	ரூ.29,42,175/-
8	தீர்பாயத்தால் ஏற்கனவே வழங்கப்பட்ட தீர்பானண தொகை	ரூ.1,00,000/-
9	மொத்தம் காலம் (7) - (8)	ரூ.28,42,175/-

22. எனவே, ரூபாய்.28,42,175 ஐ கோரிக்கை மனுதாக்கல் செய்த நாளிலிருந்து அவை செலுத்தப்படும்வரை ஆண்டுஒன்றிற்கு 9 சதவிகித வட்டியுடன் 1 ஆம்

எதிர்மேல்முறையீட்டாளருக்கு நான்கு வாரகாலத்திற்குள் செலுத்தவேண்டும் என்று உத்திரவிடப்படுகிறது.

23. மேல்முறையீடு பகுதியாக மேற்கூறியவாறு அனுமதிக்கப்படுகிறது.

நிதி ஜெயின் மேல்முறையீடு பகுதியாக அனுமதிக்கப்பட்டது

<u>பொறுப்புத்துறப்பு</u>

"வட்டார மொழியில் மொழியாக்கம் செய்யப்பட்ட இத்தீர்ப்புரையானது, வழக்காடி, தன்னுடைய மொழியில் புரிந்துகொள்வதற்கு பயன்படுத்திக்கொள்வதற்குட்பட்டதேயன்றி, வேறெந்த நோக்கத்திற்காகவும் பயன்படுத்திக்கொள்ளலாகாது. அனைத்து நடைமுறையான மற்றும் அலுவல்முறையான நோக்கங்களுக்கும் மற்றும் தீர்ப்புரையை நிறைவேற்றலுக்கும், செயற்படுத்தலுக்கும் அதன் ஆங்கிலப் பதிப்பே அதிகாரப்பூர்வமானதாகும். "